# தமிழ்

## வாசிப்புப் பயிற்சிக் கையேடு

பள்ளிக் கல்வித் துறை

திண்டுக்கல் மாவட்டம்

2021-2022

## தமிழ் வாசிப்புப் பயிற்சிக் கையேடு – அமைப்புக் குழு

### குழுத் தலைவர்கள்

திருமிகு.வெ. ஜெயக்குமார் அவர்கள்,
இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

திருமிகு.சீ.கருப்புசாமி அவர்கள்,
முதன்மைக் கல்வி அலுவலர், திண்டுக்கல்.

திருமிகு.அ. மாரிமீனாள் அவர்கள்,
மாவட்டக் கல்வி அலுவலர், திண்டுக்கல்.

திருமிகு. பெ. திருநாவுக்கரசு அவர்கள்,
மாவட்டக் கல்வி அலுவலர், பழனி.

முனைவர் இ. பாண்டித்துரை அவர்கள்,
மாவட்டக் கல்வி அலுவலர், வத்தலக்குண்டு.

திருமிகு.இரா. கீதா அவர்கள்,
மாவட்டக் கல்வி அலுவலர், வேடசந்தூர்.

### குழு மேற்பார்வையாளர்கள்

திரு. ச. குமரேசன், தலைமையாசிரியர், அரசு மேனிலைப் பள்ளி, ஆத்தூர்.

திரு.பெ. மகாவிஷ்ணு, தலைமையாசிரியர், அரசு மேனிலைப் பள்ளி, பள்ளப்பட்டி.

திரு. வே. வேளாங்கண்ணி, தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, எஸ்.வாடிப்பட்டி.

திரு.பெ. சோமசுந்தரம், தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, கொழிஞ்சிப்பட்டி.

### ஆசிரியர் குழு

திரு.வி. குழந்தைராஜ், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), புனித மரியன்னை மேனிலைப் பள்ளி, திண்டுக்கல்.

முனைவர் திருமதி ரெ.விமலாதேவி, பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு மேனிலைப் பள்ளி, திருமலைராயபுரம்.

திரு.க. கருப்புச்சாமி, பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு மேனிலைப் பள்ளி, தென்னம்பட்டி.

முனைவர் திரு. நா. மாசித்துரை, பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு உயர்நிலைப் பள்ளி, கணக்கன்பட்டி.

முனைவர் திரு. கொ.சுப. கோபிநாத், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு மேனிலைப் பள்ளி, இலந்தக்கோட்டை.

திருமதி இரா. இராதிகா, பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லாம்பட்டி.

திரு.தே. விஜயகுமார், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு மேனிலைப் பள்ளி, சமுத்திராபட்டி.

திரு.க. ரகுநாத், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு மேனிலைப் பள்ளி, செந்துறை.

திரு.ஆ. ஆனந்த் ஃபிரடி சில்வா, பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு உயர்நிலைப் பள்ளி, முளையூர்.

திரு.தே. செல்வக்குமார், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), அரசு உயர்நிலைப் பள்ளி, மூங்கில்பட்டி.

**கட்டகம் வடிவமைப்பு:** முனைவர் திரு. கொ.சுப. கோபிநாத்.

**வலையொளிப் பதிவுகள் உருவாக்கம்:** திரு. தமிழ்ப்பெரியசாமி, திரு.வி. குழந்தைராஜ், முனைவர் திருமதி. ரெ. விமலாதேவி.

**திரு. வெ. ஜெயக்குமார்,**
**இணை இயக்குநர் (தொழிற்கல்வி),**
**பள்ளிக்கல்வித் துறை,**
**சென்னை.**

# *வாழ்த்து மடல்*

*அனைவருக்கும் வணக்கம்.*

*அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். தீநுண்மிக் காலம் மனித சமுதாயத்தை நோக்கிப் பல அறைகூவல்களை முன்வைத்திருக்கிறது. நம் பள்ளிக்கல்வித் துறை நோக்கியும் அவ்வறைகூவல் உள்ளது. கற்றலில் பின்னடைவு எனும் அவ்வறைகூவலை நாம் எதிர்கொண்டிருக்கிறோம்.*

*இந்த அறைகூவலை வெல்வதற்கு வாசிப்புத் திறன் குறைந்துள்ள மாணவர்களை மேம்படுத்த திண்டுக்கல் மாவட்டக் கல்வித்துறை **"தமிழ் வாசிப்புப் பயிற்சிக் கையேடு"** எனும் கல்விச் சுரபியை உருவாக்கியுள்ளது. இம்முயற்சியில் ஈடுபட்ட திண்டுக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், திண்டுக்கல், பழனி, வேடசந்தூர், வத்தலக்குண்டு கல்வி மாவட்ட அலுவலர்கள், குழு மேற்பார்வையாளர்களாகச் செயல்பட்ட தலைமையாசிரியர்கள், ஆசிரியர் குழு, கட்டகம் வடிவமைத்தவர், வலையொளிப் பதிவுகள் உருவாக்கியவர் ஆகிய அனைவரையும் வாழ்த்துகிறேன்.*

*இருபத்தோரு நாள்கள் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பயிற்சி, எழுத்திலிருந்து சொல், சொல்லிலிருந்து தொடர், தொடரிலிருந்து பத்தி, தொடர்பணி, தொடர்பயிற்சிகள், ஆசிரியர்களுக்கான செயலி, வாசிக்க வேண்டிய நூல்கள், மற்றும் தமிழ் நூல்கள் தொடர்பான இணைய முகவரி இணைப்புகள் என விரிந்து நடைபயில்கிறது இக்கட்டகம்.*

*கூட்டு முயற்சியில் உருவான இக்கூட்டாஞ்சோற்றை மாணவர்களிடம் உரிய முறையில் கொண்டு சேர்த்து அதற்குரிய பலனைப் பெறுவது களப் பணியாளர்களாகிய ஆசிரியர்கள் கையில் உள்ளது. இப்பணியை நீங்கள் செவ்வனே செய்வீர்கள் என்று நம்புகிறேன்.*

*மாணவர்களே! இக்கையேடு ஆசிரியர்களுக்குக் கைவிளக்காவது போல் உங்களுக்கு இது கலங்கரை விளக்கமாகும் என்பதில் ஐயமில்லை. எளிய முயற்சிகள்தாம் பிரமாண்டங்களை வெல்லும். ஆகவே, வாசிப்புப் பயிற்சி எனும் வரலாற்றில் இடம் பிடியுங்கள். நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்.*

**வாசிப்பை நேசிப்போம்!**
**வானளாவ யோசிப்போம்!!**

**வாழ்த்துகளுடன்,**



***திரு. சீ. கருப்புசாமி,***
*முதன்மைக் கல்வி அலுவலர்,*
*திண்டுக்கல்.*

# வாழ்த்து மடல்

*அன்பிற்கினியவர்களே…*

*வணக்கம் . கேடில் விழுச்செல்வமாகிய கல்வியைப் பெறுவதற்கான வாயிலாக அமைவது வாசிப்பு . “ நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு” என்பதற்கிணங்க மாணவர்கள் பல்துறைசார் அறிவினை வளப்படுத்திக்கொள்ள வாசிப்பு அவசியம் .*

*பெருந்தொற்றுக் காலத்தில் மாணவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளியால் அவர்களது வாசிப்புத் திறனில் பெரும்பின்னடைவு இருப்பது கண்டறியப்பட்டது .*

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து தலைமையாசிரியர்கள் மற்றும் தமிழாசிரியர்களை ஒருங்கிணைத்துக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது . இக்குழுவினரால் மாணவர்களின் திறனுக்கேற்றவாறு பாடங்கள் வரையறுக்கப்பட்டுத் ’ **தமிழ் வாசிப்புப் பயிற்சிக் கையேடு** ’ நமது திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ளது .*

*பயிற்சிக் கட்டகமானது மாணவர்களின் சிந்தனையைக் கவரும் வகையில் வண்ணப் படங்களுடன் வண்ண எழுத்துகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது . மாணவர்களின் புரிதல் திறனை மேம்படுத்தும் வண்ணம் எழுத்துகளிலிருந்து சொல் , சொற்களிலிருந்து தொடர் , தொடர்களிலிருந்து பத்தி என்ற முறையில் அமைந்துள்ள பாங்கு சிறப்பிற்குரியது .*

*புதுமையான கல்விச் சூழலிலும் பெருந்தொற்று இன்னும் தொடர்கிற நிலையிலும் இணைய வழியிலேனும் மாணவர்களுடன் இணைந்து அவர்களது வாசிப்புத் திறனை வளப்படுத்திட வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் காணொளிகள் தயாரிக்கப்பட்டு வலையொளியில் பதிவேற்றம் ( **தமிழ் வாசிப்புப் பயிற்சி – திண்டுக்கல்** ) செய்யப்பட்டுள்ள திறம் குழுவினருக்குள்ள மாணவர் நலன் மீதான அக்கறையை , பொறுப்புணர்வைக் காட்டுகிறது . ஒட்டுமொத்தமாகக் குழுவிலுள்ள அனைவரின் உழைப்பும் அக்கறையும் பாராட்டிற்குரியது .*

*ஆசிரியர்கள் தங்களிடமுள்ள மாணவர்களின் திறனுக்கேற்றவாறு இக்கையேட்டின் வழியாகவும் தமது சொந்த அனுபவத்தின் மூலமாகவும் அவர்களது வாசிப்புத் திறனை மேம்படுத்திட தகுந்த பயிற்சிகளை வழங்க அறிவுறுத்துகிறேன் .*

*ஆசிரியர்கள் வழங்கும் தமிழ் வாசிப்புப் பயிற்சியில் மாணவர்கள் முழுமையாகப் பங்கேற்றுத் தமது திறனை மேம்படுத்திட வாழ்த்துகிறேன் .*

*வாசிப்பை வளப்படுத்துவோம் !*

*வாழ்த்துகளுடன் ,*



# பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | நுழையும் முன்... | 1 |
| 2 | எழுத்துகளின் வகைகளும் எண்ணிக்கையும் | 4 |
| 3 | உயிர் எழுத்துகள் & ஆய்தம் | 5 |
| 4 | மெய் எழுத்துகள் | 12 |
| 5 | உயிர்மெய் எழுத்துகள் | 18 |
| 5.1 | அ வரிசை | 21 |
| 5.2 | ஆ வரிசை | 25 |
| 5.3 | இ வரிசை | 29 |
| 5.4 | ஈ வரிசை | 32 |
| 5.5 | உ வரிசை | 35 |
| 5.6 | ஊ வரிசை | 38 |
| 5.7 | எ வரிசை | 42 |
| 5.8 | ஏ வரிசை | 45 |
| 5.9 | ஐ வரிசை | 48 |
| 5.10 | ஒ வரிசை | 51 |
| 5.11 | ஓ வரிசை | 54 |
| 5.12 | ஔ வரிசை | 57 |
| 6 | சொல்- ஓரெழுத்துச் சொற்கள் | 61 |
| 7 | இரண்டு எழுத்துச் சொற்கள் | 62 |
| 8 | மூன்று எழுத்துச் சொற்கள் | 64 |
| 9 | நான்கு எழுத்துச் சொற்கள் | 66 |
| 10 | இரண்டு சொல் தொடர்கள் | 68 |
| 11 | மூன்று சொல் தொடர்கள் | 69 |
| 12 | நான்கு சொல் தொடர்கள் | 70 |
| 13 | பத்திகள் | 71 |
| 14 | பயிற்சிகள் | 73 |
| 15 | மென்பொருள் செயலிகள் (ANDROID APPS) | 82 |
| 16 | ஆசிரியர்கள் வாசிக்க வேண்டிய நூல்கள் | 84 |
| 17 | தமிழ் இணைய வளங்கள் | 85 |

# 1. நுழையும் முன்...

ஆசிரியப் பெருமக்களுக்கு வணக்கம். மெல்ல மலரும் மாணவர்களை முன்னேற்றுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது இந்தக் கையேடு. பிழையின்றி வாசித்தலுக்கும் எழுதுதலுக்கும் அன்றாடப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் திறனுக்குத் தக்கவாறு அவர்களுக்குப் பயிற்சியை வழங்கலாம். மேலும், ஆசிரியர்களுக்கு உதவிடும் வகையில் மாதிரிச் செயல்பாடுகள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் மெருகூட்டும் பயிற்சிகளையும், தாங்கள் கையாண்ட புதுச்செயல்பாடுகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம். மெல்ல மலரும் மாணவர்கள் தமிழ் மொழியில் ஆர்வமுடன் வாசிக்கவும் எழுதவும் ஈடுபடச் செய்வதே இப்பயிற்சிக் கையேட்டின் நோக்கம் ஆகும்.

**பயிற்சிகளுக்காக எடுத்துக் கொள்ளும் மொத்த நாள்கள் - 21**

உயிர் எழுத்துகள் பயிற்சி - 1 நாள்

மெய் எழுத்துகள் பயிற்சி - 1 நாள்

**உயிர்மெய் எழுத்துகள் பயிற்சி**

அ – ஔ வரிசை

ஒரு வரிசைக்கு 1 நாள் வீதம் - 12 நாள்கள்

ஓரெழுத்து, இரண்டெழுத்துச் சொற்கள் – 1 நாள்

மூன்றெழுத்துச் சொற்கள் – 1 நாள்

நான்கெழுத்துச் சொற்கள் – 1 நாள்

இரு சொற்கள் தொடர் – 1 நாள்

முச்சொற்கள் தொடர் – 1 நாள்

நான்கு சொற்கள் தொடர் – 1 நாள்

பத்தி – 1 நாள்

## அறிமுகம்

ஆசிரியர்கள் எழுத்து வகை வரிசைப்படி ஒவ்வோர் எழுத்தாக அறிமுகப்படுத்த வேண்டும். அதனை எழுதும் முறை பற்றியும் கூற வேண்டும். படங்களைக் காட்டி எழுத்துகளை விளக்குதல் வேண்டும்.

## ஒலிப்புப் பயிற்சி

ஆசிரியர் ஒவ்வோர் எழுத்துகளையும் ஒலிக்கும் முறை பற்றித் தெளிவாகக் கூறி ஒலித்துக் காட்ட வேண்டும். மாணவர்களையும் ஒலிக்கப் பழக்கவேண்டும்.

## குறில் நெடில் வேறுபாடு

ஆசிரியர் எழுத்துகளைக் குறில் நெடில் வேறுபாடு தோன்ற ஒலித்துக் காட்ட வேண்டும். ஒலிக்கும் கால அளவினையும் மனதில் கொண்டு ஒலித்துக் காட்ட வேண்டும். உயிர் எழுத்துகளையும், உயிர்மெய் எழுத்துகளையும், குறில் நெடில் வேறுபாடுகளைத் தனித்தனியே உணரும் வகையில் ஒலித்துக் காட்ட வேண்டும்.

## வகுப்பறைச் செயல்பாட்டுப் பயிற்சிகள்

ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வகுப்பறைப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் நிலைக்கு ஏற்றவாறு, திறனுக்கேற்றவாறு பயிற்சிகளை அளித்து அவர்களை முன்னேற்றுவதற்கு உரிய முயற்சிகளைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

## பயிற்சிகளை மேலும் வலுவூட்டுவதற்காக வலையொளி

ஒவ்வொரு தலைப்பின் கீழும் மாணவர்கள், எழுத்துக்கான சரியான ஒலிப்பினைச் செவி வழி கேட்டுணர்வதற்கும் பயிற்சி பெறுவதற்கும் தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பில் தொடங்கப்பெற்ற வாசிப்புப் பயிற்சிக்குரிய வலையொளிக்கான இணைய இணைப்புகள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் இவற்றைப் பள்ளியில் உள்ள உயர்தொழில் நுட்பக் கணினி ஆய்வகம் வாயிலாகவும், வகுப்பிற்கான புலனக் குழுவின் வாயிலாகவும் வாசிப்புப் பயிற்சியை மேற்கொள்ள இயலும் வகையில் இக்கையேடு திட்டமிடப்பட்டுள்ளது.

## தொடர்பணி

மாணவர்கள் தங்களிடம் உள்ள வளங்களைப் பயன்படுத்தும் வகையில் தொடர்ச்சியான பயிற்சிகளை அளிக்கலாம். செய்தித்தாள், புத்தகங்கள் அவற்றில் உள்ள எழுத்துகளைக் குறிக்கும் வகையில் தொடர் பணிகளை அளிக்கலாம்.

**YOUTUBE CHANNEL**

**தமிழ் வாசிப்புப் பயிற்சி – திண்டுக்கல்**

ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தலுக்கு உருவாக்கிப் பயன்படுத்தும் காணொலிப் பதிவுகள், எண்ணிமக் கோப்புகளைக் (DIGITIZED FILES) கீழ்க்காணும் புலன எண்களுக்கு அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். குழுவினரின் முடிவுக்கு உட்பட்டு நமது வலையொளியில் பதிவேற்றம் செய்யப்படும்.

புலன எண்கள்: 7708548427, 9894067206

மின்னஞ்சல் முகவரி: vaasitamil2022@gmail.com

குறிப்பு: மேலே குறிப்பிட்டுள்ள "தமிழ் வாசிப்புப் பயிற்சி – திண்டுக்கல்" என்னும் வலையொளி அலைவரிசையில் உறுப்பினராகுங்கள். வலையொளியை வளப்படுத்துங்கள்.

# 2.தமிழ் எழுத்துகளின் வகைகளும் எண்ணிக்கையும்

மொழிக்கு அடிப்படையாக விளங்குவன எழுத்துகள். எழுதப்படுவதால் எழுத்து என்பர். இது எழுத்தின் வரிவடிவத்தைக் குறிக்கிறது. நம் வாயிலிருந்து உயிர்க்காற்றால் எழுப்பப்படும்போது எழுத்தின் ஒலிவடிவம் உண்டாகிறது. எனவே, எழுதப்படுவதும் எழுப்பப்படுவதும் எழுத்து. உலகில் பழமையும் நேர்த்தியும் கொண்டது தமிழ்மொழி. நம் தமிழில் உள்ள எழுத்துகளை அறிந்துகொண்டு அவற்றைச் சரியாக ஒலிப்பதற்கான பயிற்சியையும் நாம் முறையாகக் கற்றுக்கொள்வோம். வாருங்கள்.

| | |
|---|---|
| உயிர் எழுத்துகள் | 12 |
| மெய் எழுத்துகள் | 18 |
| உயிர்மெய் எழுத்துகள் | 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| **மொத்தம்** | **247** |

**ஆர்வமூட்டல் வலையொளி:**

https://www.youtube.com/watch?v=CapuJReZpiQ

# 3.உயிர் எழுத்துகள்

**அறிமுகம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

உயிர் எழுத்துகளில் குறுகிய ஒலியுடைய எழுத்துகள் 5.

அ, இ, உ, எ, ஒ

உயிர் எழுத்துகளில் நீண்ட ஒலியுடைய எழுத்துகள் 7.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

# அ



அணில் அன்னம் அப்பளம் அலை அகல்

# ஆ





ஆடு ஆணி ஆலமரம் ஆடல் ஆப்பம்

# இ





இலை இஞ்சி இறகு இமை இளநீர்

# ஈ






ஈ ஈட்டி ஈச்சமரம் ஈறு ஈசல்

## உ

  

உளி உழவர் உரல் உப்பு உடுக்கை

## ஊ

  

ஊசி ஊதல் ஊஞ்சல் ஊர்தி ஊறுகாய்

## எ

  

எலி எறும்பு எருமை எட்டு எலுமிச்சை

# ஏ





ஏணி ஏற்றம் ஏலக்காய் ஏரி ஏழ்மை

# ஐ





ஐந்து ஐவர் ஐவிரல் ஐம்பது ஐம்புலன்

# ஒ





ஒன்று ஒட்டகம் ஒலிபெருக்கி ஒலி ஒன்பது

# ஓ



ஓலை ஓடம் ஓணான் ஓவியம் ஓட்டுநர்

# ஔ



ஔவை ஔடதம் (மருந்து) ஔவியம் (புறம் கூறுதல்) ஔனம் (ரசம்)

**உயிர் எழுத்துகள் வலையொளி:**

https://www.youtube.com/watch?v=N6kOU9IVh9w

# ஆய்த எழுத்து

ஃ

  


எஃகு அஃது கஃசு பஃறுளி

## ஆய்த எழுத்து - வலையொளி:

https://www.youtube.com/watch?v=gmFoUDFQDgo

## பயிற்சி

### உயிரெழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| இன்பம் | உதவி | அரிசி | ஆகாயம் |
| ஏற்றம் | எச்சம் | ஈச்சமரம் | ஊஞ்சல் |
| உண்மை | அன்பு | இரக்கம் | ஏலக்காய் |
| ஔவை | ஓசை | ஆதாயம் | ஓரம் |
| ஆரம் | ஈசல் | உளி | ஐராவதம் |
| ஒட்டகம் | ஊக்கம் | உலா | ஏலாதி |
| ஐந்து | அச்சம் | ஏணி | ஓநாய் |
| அருவி | இசை | ஆசிரியர் | இஞ்சி |
| உப்பு | எலுமிச்சை | ஒலிப்பான் | ஆர்வம் |
| ஏக்கம் | ஒற்றுமை | உறவினர் | அறிவு |

### சொல்வதை எழுதுக

ஈ, அ, ஊ, ஏ, ஔ, ஆ, இ, ஒ, உ, எ, ஐ, ஓ

### தொடர்பணி

உயிர் எழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களை உமது பாடப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதி வரவும்.

# 4.மெய் எழுத்துகள்

அறிமுகம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் |
| ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

‘க்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





கொக்கு, சக்கரம், மூக்கு, பாக்கு, நாக்கு, தக்காளி

‘ங்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





சங்கு, குரங்கு, வெங்காயம், சிங்கம், மாங்காய், தேங்காய், தங்கம்

‘ச்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





பச்சை, மொச்சை, எலுமிச்சை , குச்சி, தச்சர், அச்சாணி, மச்சம்

‘ஞ்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





இஞ்சி, மஞ்சள், ஊஞ்சல், பஞ்சு, பிஞ்சு, அஞ்சல்

‘ட்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





தட்டு, பெட்டி, பட்டம், குட்டி, தொட்டி, வட்டம்

‘ண்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





கண், வண்டு, நண்டு, ஆண், பெண், சுண்டல்

‘த்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





கத்தி, நத்தை, சுத்தியல், முத்து, தாத்தா, கொத்து, எழுத்து, மத்தளம்

'ந்' எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:

  

பந்து, பருந்து, பேருந்து, ஆந்தை, தந்தம், மருந்து

'ப்' எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:

  

சீப்பு,, தொப்பி, கப்பல், உப்பு, பாப்பா, பப்பாளி, செருப்பு

'ம்' எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:

  

குடம், பொம்மை, பம்பரம், நிலம், கம்பு, செம்பு, கம்மல், கரும்பு

'ய்' எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:

  

நாய், பாய், கொய்யா, தாய், காய், செய்

‘ர்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





தேர், வேர், ஆசிரியர், நார், மலர், போர்வை, சர்க்கரை, மருத்துவர்

‘ல்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





கால், பல்லி, மயில், கல், பல், பால், முல்லை, மல்லிகை

‘வ்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





செவ்வகம், செவ்வாழை, செவ்வந்தி, சவ்வு, செவ்வானம், செவ்வரளி,

‘ழ்’ எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





தாழ்ப்பாள், கேழ்வரகு, குங்குமச்சிமிழ், கூழ், தமிழ், இதழ், குமிழ்,

'ள்' எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:






முள், தேள், பள்ளி, கோள், வாள், தோள், வெள்ளை, வெள்ளாடு

'ற்' எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





புற்று, நாற்காலி, வெற்றிலை, நாற்று, ஏற்றம், கற்பூரம்,

'ன்' எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள்:





மான், மீன், சன்னல், பொன், பன்றி, சூரியன்

## மெய் எழுத்துகள் வலையொளி:

https://www.youtube.com/watch?v=xEn2nHIDQgg

## பயிற்சிகள்:

### மெய்யெழுத்தை அடையாளம் கண்டு வட்டமிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| ஏற்றம் | புற்று | நாற்று | நாற்காலி | வெற்றிலை |
| கூழ் | இதழ் | கேழ்வரகு | சிமிழ் | குமிழ் |
| தேர் | வேர் | மலர் | போர்வை | ஆசிரியர் |
| கம்பு | கரும்பு | செம்பு | குடம் | பொம்மை |
| தச்சர் | பச்சை | மொச்சை | எலுமிச்சை | அச்சாணி |
| சன்னல் | பொன் | மான் | சூரியன் | பன்றி |
| கண் | வண்டு | நண்டு | பெண் | சுண்டல் |
| இஞ்சி | பஞ்சு | அஞ்சல் | பிஞ்சு | பூஞ்சை |
| எழுத்து | முத்து | தாத்தா | நத்தை | மாத்திரை |
| வாள் | பள்ளி | புள்ளி | வெள்ளாடு | குதிரைகள் |

### சொல்வதை எழுதுக.

ந் ம் க் த் ப் ஞ் வ் ல் ன் ற் ய்

### தொடர்பணி

மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

# 5. உயிர்மெய் எழுத்துகள்

உருவாகும் விதம்:

பதினெட்டு மெய்யெழுத்துகள், பன்னிரண்டு உயிரெழுத்துகளோடு சேர்ந்து 216 உயிர்மெய் எழுத்துகள் உருவாகின்றன.

க் + அ = க. இதில் உருவான 'க' எழுத்தானது உருவில் மெய்யெழுத்தையும், உச்சரிப்பில் (ஒலிக்கும் கால அளவில்) உயிரெழுத்தையும் சார்ந்து அமையும். இவ்வாறே அனைத்து உயிர்மெய் எழுத்துகளும் உருவாகும்.

உயிரெழுத்துகளில் அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து குறில்களும் 18 மெய்யெழுத்துகளுடன் சேரும்போது 90 உயிர்மெய்க் குறில் எழுத்துகள் தோன்றுகின்றன.

உயிரெழுத்துகளில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு நெடில் எழுத்துகளும் 18 மெய்யெழுத்துகளுடன் சேரும்போது 126 உயிர்மெய் நெடில் எழுத்துகள் தோன்றுகின்றன.

இவற்றைப் பின்வருமாறு அட்டவணையில் காணலாம்.

# உயிர்மெய்க் குறில் எழுத்துகள் அட்டவணை

| + | அ | இ | உ | எ | ஒ |
|---|---|---|---|---|---|
| க் | க | கி | கு | கெ | கொ |
| ங் | ங | ஙி | ஙு | ஙெ | ஙொ |
| ச் | ச | சி | சு | செ | சொ |
| ஞ் | ஞ | ஞி | ஞு | ஞெ | ஞொ |
| ட் | ட | டி | டு | டெ | டொ |
| ண் | ண | ணி | ணு | ணெ | ணொ |
| த் | த | தி | து | தெ | தொ |
| ந் | ந | நி | நு | நெ | நொ |
| ப் | ப | பி | பு | பெ | பொ |
| ம் | ம | மி | மு | மெ | மொ |
| ய் | ய | யி | யு | யெ | யொ |
| ர் | ர | ரி | ரு | ரெ | ரொ |
| ல் | ல | லி | லு | லெ | லொ |
| வ் | வ | வி | வு | வெ | வொ |
| ழ் | ழ | ழி | ழு | ழெ | ழொ |
| ள் | ள | ளி | ளு | ளெ | ளொ |
| ற் | ற | றி | று | றெ | றொ |
| ன் | ன | னி | னு | னெ | னொ |

# உயிர்மெய் நெடில் எழுத்துகள் அட்டவணை

| + | ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|
| க் | கா | கீ | கூ | கே | கை | கோ | கௌ |
| ங் | ஙா | ஙீ | ஙூ | ஙே | ஙை | ஙோ | ஙௌ |
| ச் | சா | சீ | சூ | சே | சை | சோ | சௌ |
| ஞ் | ஞா | ஞீ | ஞூ | ஞே | ஞை | ஞோ | ஞௌ |
| ட் | டா | டீ | டூ | டே | டை | டோ | டௌ |
| ண் | ணா | ணீ | ணூ | ணே | ணை | ணோ | ணௌ |
| த் | தா | தீ | தூ | தே | தை | தோ | தௌ |
| ந் | நா | நீ | நூ | நே | நை | நோ | நௌ |
| ப் | பா | பீ | பூ | பே | பை | போ | பௌ |
| ம் | மா | மீ | மூ | மே | மை | மோ | மௌ |
| ய் | யா | யீ | யூ | யே | யை | யோ | யௌ |
| ர் | ரா | ரீ | ரூ | ரே | ரை | ரோ | ரௌ |
| ல் | லா | லீ | லூ | லே | லை | லோ | லௌ |
| வ் | வா | வீ | வூ | வே | வை | வோ | வௌ |
| ழ் | ழா | ழீ | ழூ | ழே | ழை | ழோ | ழௌ |
| ள் | ளா | ளீ | ளூ | ளே | ளை | ளோ | ளௌ |
| ற் | றா | றீ | றூ | றே | றை | றோ | றௌ |
| ன் | னா | னீ | னூ | னே | னை | னோ | னௌ |

## 5.1 'அ' வரிசை உயிர்மெய் எழுத்துகள் – அறிமுகம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண | த | ந | ப |
| ம | ய | ர | ல | வ | ழ | ள | ற | ன |

க் + அ = க

கண், கடை, கதை, கல்வி, கணக்கு, தங்கம், பக்கம்

ங் + அ = ங

அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம்

ச் + அ = ச

சடை, சபை, சரி, சங்கு, சக்கரம், மச்சம், பாசம்

ஞ் + அ = ஞ

ஞமலி ( நாய்), ஞண்டு ( நண்டு), ஞமன் (எமன்), கவிஞர்

ட் + அ = ட

படகு, மடல், வடம், வட்டம், பாடல்

ண் + அ = ண

பணம், குணம், கிணறு, உணவு, கணக்கு

த் + அ = த

தலை, தறி, தமிழ், தக்காளி, தவளை, உதவி, புரதம்

ந் + அ = ந

நரி, நகை, நண்டு, நடனம், நண்பன், மாநகரம்

ப் + அ = ப

பசு, பந்து, படகு, பருந்து, பம்பரம், கப்பல்

ம் + அ = ம

மண், மலை, மணி, மயில், மன்னன், சமம், இமயம்

ய் + அ = ய

வயல், முயல், ஐயம், உயர்வு, இயல்பு

ர் + அ = ர

மரம், வரகு, கரடி, கரகம், நேரம்

ல் + அ = ல

கலம், காலம், கோலம், பாலம், கலப்பை, லட்டு

வ் + அ = வ

வரி, வழி, வலை, வண்டி, வனம், தாவரம்

ழ் + அ = ழ

பழம், குழல், குழந்தை, குழப்பம், தாழம்பூ

ள் + அ = ள

அளவு, குளம், சோளம், குளவி, வளர்ச்சி

ற் + அ = ற

குறள், சிறகு, முறம், மறதி, சிறப்பு

ன் + அ = ன

மனம், வனம், வானம், கானம், மன்னன், பனம்பழம்

## உயிர்மெய் எழுத்துகள் ( அ – வரிசை ) வலையொளி:

https://www.youtube.com/watch?v=tky337ui1DI

## பயிற்சி

### விடுபட்ட இடங்களில் சரியான எழுத்தைக் கொண்டு நிரப்புக

1. த் + அ = ____
2. ____ + அ = ர
3. ழ் + ____ = ழ
4. ச் + அ = ____
5. ____ + அ = ட

### கொடுக்கப்பட்டுள்ள பத்தியில் "அ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.

தமிழ் பழமையும் வளமும் கொண்ட மொழி. தமிழ்ப் புலவர்கள் மொழியை அன்னையாகக் கொண்டு இலக்கிய, இலக்கணப் படைப்புகளை அணிகலன்களாக அணிவித்து மகிழ்ந்தனர்.

## தொடர்பணி

"அ" வரிசை உயிர்மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

க் + அ = க ....... இது போல் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந்து வருவதை வரிசையாக எழுதவும்.

## 5.2 'ஆ' வரிசை உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கா |ஙா | சா | ஞா | டா | ணா | தா | நா | பா |
| மா | யா | ரா | லா | வா | ழா | ளா | றா | னா |

க் + ஆ = கா

கால், காடு, காசு, காகம், காற்று, அக்கா, ஆகாரம்

ங் + ஆ = ஙா

ச் + ஆ = சா

சாவி, சாட்டை, சாம்பல், சாதனை, பாடசாலை

ஞ் + ஆ = ஞா

ஞாயிறு, ஞாலம் (உலகம்), ஞாண் (கயிறு), ஞாழல் (குங்கும மரம்), விஞ்ஞானம்

ட் + ஆ = டா

தடாகம், தட்டான், கூடாரம், பட்டாசு, பட்டாம்பூச்சி

ண் + ஆ = ணா

ஓணான், அண்ணா, கண்ணாடி, எட்டணா, கண்ணாமூச்சி

த் + ஆ = தா

தாய், தாடி, தாது, தாமரை, தாத்தா, புத்தாண்டு

ந் + ஆ = நா

நாய், நாள், நாடு, நாக்கு, நாற்காலி, ஓநாய், திருநாடு

ப் + ஆ = பா

பால், பாய், பாப்பா, பாட்டு, பாக்கு, அப்பா, தாழ்ப்பாள்

ம் + ஆ = மா

மாடு, மான், மாலை, மானம், மாடம், அம்மா

ய் + ஆ = யா

யார், யாது, யாழ், யானை, யாப்பு, படிப்பாயா

ர் + ஆ = ரா

அரா (பாம்பு), ஆராட்டு, ஆராய்ச்சி, இராமன், இராணுவம்

ல் + ஆ = லா

நிலா, பலா, ஏலாதி, காலாள், கோலாட்டம்

வ் + ஆ = வா

வாளி, வாழை, வானம், வாசல், வாய்மை, அவா

ழ் + ஆ = ழா

விழா, குழாய், குழாம், ஆழாக்கு, மணவிழா

ள் + ஆ = ளா

காளான், விளாம்பழம், அளாவல், கோளாறு, வெள்ளாடு

ற் + ஆ = றா

புறா, இறால், கற்றாழை, காற்றாடி, குற்றாலம்

ன் + ஆ = னா

வினா, கனா, சீனா, மைனா, அன்னாசிப்பழம்

**உயிர்மெய் எழுத்துகள் ( ஆ – வரிசை ) வலையொளி:**

https://www.youtube.com/watch?v=YZn6AaXlCtM&t=100s

## பயிற்சி

### பொருத்துக.

1. ன் + ஆ - தா
2. ப் + ஆ - மா
3. த் + ஆ - னா
4. க் + ஆ - பா
5. ம் + ஆ - கா

### கொடுக்கப்பட்டுள்ள தொடர்களில் "ஆ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.

(அ) யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(ஆ) தாவி ஓடும் மாட்டைக் காட்டில் விடாதே! சாட்டையாலும் அடிக்காதே!
பாவம் வாயில்லா உயிராச்சே!

## தொடர்பணி

"ஆ" வரிசை உயிர்மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

க் + ஆ = கா ....... இது போல் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந்து வருவதை வரிசையாக எழுதவும்.

## 5.3 'இ' வரிசை உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | ஙி | சி | ஞி | டி | ணி | தி | நி | பி |
| மி | யி | ரி | லி | வி | ழி | ளி | றி | னி |

க் + இ = கி

கிளி, கிளை, கிணறு, கிழமை, கிரகம், சுக்கிரன், அங்கி

ங் + இ = ஙி

ச் + இ = சி

சிகை, சிட்டு, சிகரம், சிங்கம், சிலந்தி, வசிப்பிடம், முயற்சி

ஞ் + இ = ஞி

ஞிமிறு (தேனீ), ஞிமிர் (ஒலி)

ட் + இ = டி

படி, நாடி, சுவடி, கரடி, தொட்டி, நடிப்பு

ண் + இ = ணி

மணி, ஆணி, அண்ணி, வெண்ணிலா, கண்ணிமை

த் + இ = தி

திசை, தினம், திட்டு, திடம், திரவம், சுத்தியல், வீதி

ந் + இ = நி

நிலா, நிலம், நிலை, நிமிடம், நிகழ்வு, ஆநிரை

ப் + இ = பி

பிடி, பிணி, பிஞ்சு, பித்தம், பிடிவாதம், தப்பிதம், சுரப்பி

ம் + இ = மி

மிளகு, மிகுதி, மின்னல், மிருகம், மிதிவண்டி, அமிலம், அம்மி

ய் + இ = யி

மயில், தயிர், வயிறு, அயிரை, வெயில்

ர் + இ = ரி

நரி, ஏரி, பாரி, காரிகை, சூரியன்

ல் + இ = லி

எலி, புலி, பல்லி, நெல்லி, மல்லிகை

வ் + இ = வி

விண், விதை, விசிறி, விரல், விடுதி, அவியல், சாவி

ழ் + இ = ழி

வழி, விழி, தமிழி, நெகிழி, ஒழிப்பு

ள் + இ = ளி

உளி, வெளி, பள்ளி, வள்ளி, கொள்ளிடம்

ற் + இ = றி

கறி, பறி, வெற்றி, நெற்றி, வெற்றிலை

ன் + இ = னி

கனி, பனி, இனிமை, சகுனி, பங்குனி

**உயிர்மெய் எழுத்துகள் ( இ – வரிசை ) வலையொளி:**

https://www.youtube.com/watch?v=w3QxsGoJG_E

## பயிற்சி

**விடுபட்ட இடங்களில் சரியான எழுத்தைக் கொண்டு நிரப்புக**

1. ப் + இ = ____
2. ____ + இ = ரி
3. ச் + ____ = சி
4. ள் + இ = ____
5. _____ + _____ = ணி

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் "இ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

குருவி, மாங்கனி, கிளி, சிந்து, பிச்சிப்பூ, விவசாயி, கரிப்புமணி, இராட்டினம், பதிப்பு, நிலம்.

## தொடர்பணி

"இ" வரிசை உயிர்மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

க் + இ = கி……. இது போல் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந்து வருவதை வரிசையாக எழுதவும்.

## 5.4 'ஈ' வரிசை உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கீ | ஙீ | சீ | ஞீ | டீ | ணீ | தீ | நீ | பீ |
| மீ | யீ | ரீ | லீ | வீ | ழீ | ளீ | றீ | னீ |

க் + ஈ = கீ

கீரி, கீரை, கீதம், கீழடி, கீற்று, பகீரதன், வாகீசன்

ங் + ஈ = ஙீ

ச் + ஈ = சீ

சீட்டு, சீதை, சீப்பு, சீதனம், சீராட்டு

ஞ் + ஈ = ஞீ

ட் + ஈ = டீ

காண்டீபம், கோடீசுவரன், கண்டீரம் (சதுரக்கள்ளி)

ண் + ஈ = ணீ

தண்ணீர், காணீர், மண்ணீரல், கண்ணீரம்

த் + ஈ = தீ

தீ, தீவு, தீபம், தீவனம், தீப்பெட்டி

ந் + ஈ = நீ

நீ, நீதி, நீறு, நீலம், நீள்வட்டம்

ப் + ஈ = பீ

பீலி, பீதி, பீடு, பீடம், பீரங்கி, வைப்பீடு

ம் + ஈ = மீ

மீசை, மீன், மீட்சி, மீனாட்சி, மீளாய்வு, விண்மீன்

ய் + ஈ = யீ

நுரையீரல், அன்புடையீர்

ர் + ஈ = ரீ

பாரீர், வாரீர், தாரீர்

ல் + ஈ = லீ

கல்லீரல், சொல்லீறு, முதலீடு

வ் + ஈ = வீ

வீடு, வீதி, வீணை, வீரம், வீழ்ச்சி, படைவீரன்

ழ் + ஈ = ழீ

தமிழீழம், தழீஇ

ள் + ஈ = ளீ

வெள்ளீயம், முள்ளீட்டி, பளீரென

ற் + ஈ = றீ

புற்றீசல்

ன் + ஈ = னீ

பன்னீர், தேனீ

## உயிர்மெய் எழுத்துகள் ( ஈ – வரிசை ) வலையொளி:

https://www.youtube.com/watch?v=hkscJmLHDD0

## பயிற்சி

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் "ஈ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

வீரம், தென்னங்கீற்று, திரைச்சீலை, பன்னீர், தீஞ்சுவை, நீலவானம், கம்பீரம், செம்மீன், பொருளீட்டி, நுரையீரல்.

## பொருத்துக

1. ச் + ஈ = நீ
2. ட் + ஈ = தீ
3. ண் + ஈ = டீ
4. த் + ஈ = சீ
5. ந் + ஈ = ணீ

## தொடர்பணி

"ஈ" வரிசை உயிர்மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

க் + ஈ = கீ ……. இது போல் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந்து வருவதை வரிசையாக எழுதவும்.

## 5.5 'உ' வரிசை உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கு | ஙு | சு | ஞு | டு | ணு | து | நு | பு |
| மு | யு | ரு | லு | வு | ழு | ளு | று | னு |

க் + உ = கு

குடை, குகை, குடம், குளம், குடிநீர், குரங்கு, பாக்கு,

ங் + உ = ஙு

ச் + உ = சு

சுழி, சுதை, சுட்டி, சுழற்சி, சுதந்திரம், பரிசு, அச்சு

ஞ் + உ = ஞு

ட் + உ = டு

வீடு, நாடு, பட்டு, தகடு, சுருட்டு

ண் + உ = ணு

எண்ணுதல், கண்ணும், பண்ணும், பண்ணுருட்டி, காணுதல், பேணுக

த் + உ = து

துணி, துடி, துத்தி, துலாம், துவையல், புத்துணர்ச்சி, வாத்து

ந் + உ = நு

நுரை, நுங்கு, நுதல், நுழைவாயில், நுரையீரல்

ப் + உ = பு

புல், புலி, புழுதி, புரவி, புலவர், ஒப்புதல், அரும்பு

ம் + உ = மு

முடி, முள், முகம், முட்டை, முழக்கம், சமுதாயம்

ய் + உ = யு

செய்யுள், பையுள் (நோய்), யுத்தம், யுரேனஸ், யுனானி, யுகம்

ர் + உ = ரு

திரு, மரு, அருள், பொருள், மருந்து, கருத்துரு

ல் + உ = லு

எலும்பு, எலுமிச்சை, பல்லுயிர், வில்லுப்பாட்டு, வெல்லுதல்

வ் + உ = வு

உணவு, கதவு, கனவு, வரவு, ஆதரவு

ழ் + உ = ழு

புழு,கழுகு, மெழுகு, பொழுது, எழுத்து

ள் + உ = ளு

பளு, பள்ளு, எள்ளுதல், உள்ளுக, தள்ளுக

ற் + உ = று

சோறு, ஊற்று, காற்று, நேற்று, மகப்பேறு, வெறுப்பு

ன் + உ = னு

இன்னுயிர், முன்னுரை, முன்னுரிமை, அனுமதி, வானுலகு

## உயிர்மெய் எழுத்துகள் ( உ – வரிசை ) வலையொளி:

https://www.youtube.com/watch?v=lFBJECvG9rE&t=8s

## பயிற்சி

**விடுபட்ட இடங்களில் சரியான எழுத்தைக் கொண்டு நிரப்புக**

1. க் + உ = ____
2. ____ + உ = ளு
3. வ் + ____ = வு
4. ற் + உ = ____
5. ____ + உ = ணு

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் "உ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

துகள், அடுப்பு, புற்று, புத்துணர்வு, முன்னுரிமை, உள்ளுணர்ச்சி, காத்திருப்பு, பல்லுயிர், இவ்வுலகம், தமிழுலகு.

## தொடர்பணி

"உ" வரிசை உயிர்மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

க் + உ = கு ……. இது போல் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந்து வருவதை வரிசையாக எழுதவும்.

## 5.6 'ஊ' வரிசை உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கூ | ஙூ | சூ | ஞூ | டூ | ணூ | தூ | நூ | பூ |
| மூ | யூ | ரூ | லூ | வூ | ழூ | ளூ | றூ | னூ |

க் + ஊ = கூ

கூடு, கூகை, கூலம், கூம்பு, கூட்டுறவு, ஆகூழ்

ங் + ஊ = ஙூ

ச் + ஊ = சூ

சூடு, சூல், சூலை, சூரியன், சூழ்ச்சி, மகசூல், செஞ்சூடு

ஞ் + ஊ = ஞூ

ட் + ஊ = டூ

நீடூழி, மேட்டூர், தகடூர், காட்டூர், வைடூரியம், ஆடூஉ, மகடூஉ

ண் + ஊ = ணூ

கண்ணூர், கண்ணூத்து, தொண்ணூறு, எண்ணூறு, பொருணூல்

த் + ஊ = தூ

தூசி, தூளி, தூய்மை, தூக்கம், தூக்கணாங்குருவி, செந்தூரம்

ந் + ஊ = நூ

நூல், நூறு, நூற்றாண்டு, முந்நூறு, ஐந்நூறு

ப் + ஊ = பூ

பூ, பூச்செடி, பூமகள், பூபாளம், பூம்புகார், இறும்பூது

ம் + ஊ = மூ

மூடி, மூலை, மூக்கு, மூச்சு, மூவேந்தர், தம்மூர்

ய் + ஊ = யூ

வெளியூர், கரிக்கையூர், ஆந்தையூர், பாடியூர், வண்டியூர், வியூகம்

ர் + ஊ =ரூ

கரூர், பேரூர், தேரூர், உத்திரமேரூர், நீரூற்று, ரூபாய்

ல் + ஊ = லூ

மேலூர், அல்லூர், அய்யலூர், ஓமலூர், காலூன்றி

வ் + ஊ = வூ

சவ்வூடு, பாவூர், கோவூர், கருவூலம்

ழ் + ஊ = ழூ

கீழூர், புகழூர், தமிழூர், குழூஉக்குறி

ள் + ஊ = ளூ

உள்ளூர், வெள்ளூர், முள்ளூர், திருவள்ளூர், வள்ளூரம் (சூட்டிறைச்சி)

ற் + ஊ = றூ

சிற்றூர், கற்றூண், சீறூர், குன்றூர்

ன் + ஊ = னூ

தேனூர், மானூர், வானூர்தி, நானூறு, பின்னூட்டம்

**உயிர்மெய் எழுத்துகள் ( ஊ – வரிசை ) வலையொளி:**

https://www.youtube.com/watch?v=NQvdJE4xfXo

## பயிற்சி

**விடுபட்ட இடங்களில் சரியான எழுத்தைக் கொண்டு நிரப்புக**

1. ம் + ____ = மூ

2. ய் + ஊ = ____

3. ல் + ____ = லூ

4. ____ + ஊ = மூ

5. ட் + ஊ = ____

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் "ஊ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

கூட்டம், மூட்டம், தூற்று, பூக்கள், சூழ்ச்சி, பல்லூடகம், செவ்வூர், கொடும்பாளூர், குத்தூசி, நூற்கண்டு

## பொருத்துக

1.இளஞ்சூடு - னூ

2. வானூர்தி -ரூ

3. காரையூர் - சூ

4. வேரூன்றி - லூ

5. கல்லூரி - யூ

## தொடர்பணி

"ஊ" வரிசை உயிர்மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

க் + ஊ = கூ....... இது போல் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந்து வருவதை வரிசையாக எழுதவும்.

## 5.7 'எ' வரிசை உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெ | ஙெ | செ | ஞெ | டெ | ணெ | தெ | நெ | பெ |
| மெ | யெ | ரெ | லெ | வெ | ழெ | ளெ | றெ | னெ |

க் + எ = கெ

கெண்டை, கெளுத்தி, கெண்டி (ஒருவகைப் பாத்திரம்), கெஞ்சு, கெடுதல்

ங் + எ = ஙெ

ச் + எ = செ

செடி, செதில், செல்வம், செங்கல், செம்பருத்தி, அச்செழுத்து

ஞ் + எ = ஞெ

ஞெகிழி (கொள்ளி), ஞெமல் (சருகு), ஞெகிழம்(சிலம்பு), ஞெமன்கோல்(தராசு)

ட் + எ = டெ

சுண்டெலி, காட்டெருமை, மூட்டெலும்பு, கட்டெறும்பு

ண் + எ = ணெ

எண்ணெய், வெண்ணெய், எண்ணென்ப, பண்ணென, கண்ணென்று

த் + எ = தெ

தெரு, தென்னை, தெப்பம், தெய்வம், தென்றல்,

ந் + எ = நெ

நெய், நெல், நெல்லி, நெய்தல், திருநெல்வேலி

ப் + எ = பெ

பெண், பெட்டி, பெரியார், ஒலிபெருக்கி, பெருங்காயம், அம்பெய்தி

ம் + எ = மெ

மெட்டி, மென்மை, மெத்தை, மெழுகு, மெதுவாக, வருமென்று

ய் + எ = யெ

மெய்யெழுத்து, கையெழுத்து, பள்ளியெழுச்சி, தாயென, சேயென

ர் + எ = ரெ

உயிரெழுத்து, எதிரெதிர், போரெழுந்து

ல் + எ = லெ

நல்லெண்ணெய், வல்லெழுத்து, லெமூரியா, லெனின், மெல்லென

வ் + எ = வெ

வெடி, வெற்பு, வெளிச்சம், வெற்றிலை, வெல்லம்,வெண்டைக்காய்

ழ் + எ = ழெ

ஏழெட்டு, பாழென, அகழெலி

ள் + எ = ளெ

வெள்ளெருக்கு, வெள்ளெலி, வெள்ளெழுத்து, வெள்ளென

ற் + எ = றெ

சிற்றெறும்பு, என்றென்றும், ஆறெழுத்து, நன்றென, தெற்றென

ன் + எ = னெ

நன்னெறி, பதினெட்டு, பன்னெடுங்காலம்

**உயிர்மெய் எழுத்துகள் ( எ – வரிசை ) வலையொளி:**

https://www.youtube.com/watch?v=r-dcCscl9AU

## பயிற்சி

**விடுபட்ட இடங்களில் சரியான எழுத்தைக் கொண்டு நிரப்புக**

1.____ + எ = செ

2. த் + எ = ____

3. ப் + ____ = பெ

4. ____ + எ = யெ

5. ____ + ____ = லெ

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் "எ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அடையாளம் கண்டு வட்டமிடுக.**

கெளுத்தி, நெல்மணி, செதில், கட்டெறும்பு, கண்ணெழுத்து, வந்தெய்தும், பெரியவர், மெல்லினம், எவ்வெவை, பாரெங்கும்

## தொடர்பணி

"எ" வரிசை உயிர்மெய்யெழுத்து இடம்பெற்றுள்ள பத்துச் சொற்களைப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதவும்.

க் + எ = கெ ....... இது போல் பன்னிரண்டு உயிர்களும் சேர்ந்து வருவதை வரிசையாக எழுதவும்.

## 5.8 'ஏ' வரிசை உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கே | ஙே | சே | ஞே | டே | ணே | தே | நே | பே |
| மே | யே | ரே | லே | வே | ழே | ளே | றே | னே |

க் + ஏ = கே

கேணி, கேளிர், கேள்வி, கேடயம், கேழ்வரகு, அங்கே

ங் + ஏ = ஙே

ச் + ஏ = சே

சேய், சேனை, சேரர், சேவல், சேயோன், கச்சேரி

ஞ் + ஏ = ஞே

ட் + ஏ = டே

கண்டேன், காட்டேரி, சூடேற்றம், அடடே

ண் + ஏ = ணே

காணேன், உண்ணேன், புண்ணே, கண்ணேணி

த் + ஏ = தே

தேர், தேள், தேன், தேசம், தேங்காய், இனிதே

ந் + ஏ = நே

நேரம், நேற்று, நேசம், நேர்த்தி, நேர்காணல்

ப் + ஏ = பே

பேருந்து, பேச்சு, பேகன், பேரிக்காய், பேரூர், அமுதே

ம் + ஏ = மே

